**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.338/2018**
**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : கிருஷ்ணன் | **Caste** | : | |
| **Father's Name** | : சண்முகம் | **Calling** | : | **House Keeping** |
| **Village** | : நெட்டுத்தெரு | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **57/2026** |
| | | **Dated** | : | **17.08.2026** |

**17.08.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 **திரு.கிருஷ்ணன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை .**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் நெட்டுத்தெருவில் குடியிருந்து House Keeping வேலை செய்துவருகிறேன். கடந்த 18.06.2017ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் எனது TN 57 AC 7812 TVS XL இருசக்கர வாகனத்தை நான் வேலை செய்யும் ே ஹாட்டலின் முன்பு நிறுத்திவிட்டு வேலைக்கு சென்றுவிட்டேன்,. பின்பு வேலை முடித்து 5.30 மணிக்கு வெளியில் இருந்து வந்து பார்த்தபோது எனது இருசக்கர வாகனத்தை காணவில்லை . எனது அசல் RC புக்கை வண்டியின் கவரில் வைத்திருந்தேன். அதனால் நடவடிக்கை எடுக்க காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

எனது இருசக்கர வாகனத்தை 6 மாதம் கழித்து கண்டுபிடித்ததாக காவல் நிலையத்தில் அழைத்து அடையாளம் காட்ட சொன்னார்கள். அடையாளம் காட்டினேன். பின்பு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் புகார் நான் கொடுத்தது . அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எனது வண்டி கிடைத்துவிட்டதால் வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை. மனுதாக்கல் செய்துள்ளேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை**

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.08.17 09:35:54 +0530

Judicial Magistrate No.II
Dindigul.